REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 21உ வெள்ளி (5—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 22உ சனி (6—7—57) [இதழ் 18

ரூபாய் 5,559 செலவில் கவர்னருக்கு வரவேற்பு

அனுமதிக்கமுடியாதென ஆந்திரசர்க்கார் உத்தரவு

ஐதராபாத், ஜூலை 4—

பிரபலஸ்தர்களுக்கு வரவேற்பு அளிப்பதில் பெருந்தொகையைப் பாழடிக்க வேண்டாம் என்று நகரசபைகள், மற்றும் மாவட்டக்கழகங்களுக்கு ஆந்திர சர்க்கார் உத்தரவு ஒன்று பிறப்பித்துள்ளதாம்.

(4-ம்பக்கம் பார்க்க)

அநீதிகளையும் அக்கிரமங்களையும் பாதுகாக்கும் சமதர்மம்தான் நீடிக்கிறது

ஆட்சிக்கு ‘பார்க்கலாம்’ தலைமை தாங்குகிறது

‘தெரியவில்லை’ துணை நிற்கிறது!

முடிவோ, ‘முடியவில்லை—முயற்சிக்கலாம்’ என்பதே;

‘ஏழைகளுடைய வாழ்வு துலங்க திட்டத்தில் எதுவும் இல்லை’

சட்டசபையில் க. அன்பழகன் முழக்கம்

சென்னை, ஜூலை 5—

“ஆட்சியை நடத்துபவர்கள் சமதர்மத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்தச் சமதர்மம் எப்படி நிலைநாட்டப்படுகிறது என்று நான் எண்ணிப்பார்த்தேன். நேற்று இருந்த நிலைமைக்கும் நாளை இருக்க வேண்டிய நிலைமைக்கும் இடையே அதிகமான மாறுதல் இல்லாதபடி செய்யக்கூடிய ‘ஸ்டேட்டஸ் கோ’ என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே—அந்த மாதிரி அதிகமான மாறுதல் ஏற்படாமல், ஏற்கனவே உள்ளதையே பாதுகாக்கக்கூடிய—சென்ற காலத்திற்கும் வருங்காலத்திற்கும் இடையே அதிக மாறுதல் இல்லாத சமநிலை என்ற சமதர்மத்தைத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நான் காண்கிறேன்.

“ஏற்கனவே ஏற்பட்டுள்ள அநீதிகள் மறைக்கப்பட்டு, அக்கிரமங்கள் பல செய்யப்பட்டன என்பது மறுக்கப்பட்டு. அவைகளை இனிமேலும் நீடிக்கச் செய்யக்கூடிய சமதர்மத்தைத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நான் காண்கிறேன். அப்படிப்பட்ட சமதர்மத்தைக் காப்பாற்றக்கூடியதாகத்தான் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஏழைகளின் வாழ்க்கையில் ஏதேனும் உயர்வு, முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் குறிப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை என்பது தெளிவாகிறது.

“ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. தீப்பெட்டித் தொழிற்சாலைகளாலும், செருப்புத் தொழிற்சாலைகளாலும் ஏழைகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்றும், நெய்வேலி நிலக்கரித் திட்டம் மக்களுக்குப் பெரும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும், இரும்பை உருக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்து காகிதத்தை உருக்கிக்கொண்டுள்ளோம் என்றும், காகித ஆலைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்த்து ஏங்குகிறோம் என்றுதான் இந்தத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தில் எந்த அளவு உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பது இதில் தெரிவிக்கப்படவில்லை.

“ஆட்சியாளர்கள் எதிலாவது விரைவையும் சுறுசுறுப்பையும் காட்டியிருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. நிலைமையை விளக்க நான் ஒன்று சொல்வேன். இந்த மாநில ஆட்சியில், ‘பார்க்கலாம்’—தலைமை தாங்குகிறது; ‘தெரியவில்லை’—துணை நிற்கிறது; ‘அமைதி’—நிர்வாகம் நடத்துகிறது; ‘முடியவில்லை—முயற்சிக்கலாம்’ என்பதுதான் முடிவாக இருக்கிறது.

“இப்படி இந்த அரசாங்கத்தின் போக்கில் ‘பார்க்கலாம்’——மும், ‘தெரியவில்லை’—யும், ‘அமைதி’—யும், ‘முடியவில்லை—முயற்சிக்கிறோம்—முயற்சிக்கலாம் — மும்தான் கட்டங்களாக இருக்கின்றனவேயொழிய, ‘செயல்படுவோம்’; ‘நிறைவேற்றுவோம்’; ‘முடித்துவிட்டோம்’—என்பவை ஆட்சியின் கட்டங்களாக இல்லை.

—இவ்வாறு தோழர் க. அன்பழகன் அவர்கள், 2-7-57-ல் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது பேசுகையில் தெள்ளத் தெளிவுற எடுத்துரைத்தார்

விவாத உரையின் துவக்கத்தில் தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் சொன்னார்:—

“1957—58-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை மிக மிகத் திறமையாகத் தயாரித்து நம்மிடத்தில அளித்துள்ளார். அவர்களுடைய முழுத் திறமையையும் இதில் காட்டியிருக்கும் காரணத்தினால்தான், இந்த வரவு—செலவுத் திட்டத்தில் எந்த எந்தக் குறைபாடுகள் மிக மிக எளிதாகவும் இயல்பாகவும் பிறர் உணர்ந்து கொள்ளத் திட்டம் இடமளித்துவிடுமோ, அந்த குறைபாடுகளைக்கூடப் பிறர் உணரமுடியாதபடி செப்பனிட்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நான் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் இதுவே. இந்தத் தேசத்தில் நமது மாநிலமானது பல காரணங்களால் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதுடன் ஒரு மாநிலத்திற்குத் தேவையான முழு உரிமையும் பெறாது, உரிமைகள் குறைந்திருக்கும் காரணத்தால், பல முற்போக்குத் திட்டங்களில், வண்டியை முன்னே செலுத்தும் முன்பே பின்னே இழுக்கும் முறையில் மத்திய அரசாங்கத்தாரின் செயலும் போக்கும் இருக்கின்ற காரணத்தினால்—இந்த வரவு செலவுத் திட்டத்தில் பல குறைகள் இயல்பாகவே ஏற்பட்டுள்ளன. அவை வெளிப்படையாகக் காட்டப்படாமல், இந்த அரசாங்கமும், திட்டமும், பொதுவான ஒரு மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவை என்பது மட்டும் குறிப்பாகக் கூறப்பட்டு மக்களால் தெரிவிக்கப்பட்ட பல வேண்டுகோள்களும் வெளியிடப்பட்ட பல விருப்பங்களும் நிறைவேறும் என்ற ஆசைமட்டும்காட்டப்பட்டு, இந்தத் திட்டம் இங்கே தரப்பட்டிருக்கிறது. உண்மையாகவே, ஒரு தொழில் நிலையத்தின் நிலையானது, தலைமை நிலையம் நீண்ட தொலைவில் இருந்தபோதிலும், தனது தனி நிர்வாகத்திற்கான வரவு-செலவு அறிக்கையில் எப்படி மேலேயுள்ள கம்பெனியின் விருப்பங்களையும் லட்சியங்களையும் ஏற்றுப், பெயர் அளவில் தானும் ஒரு திட்டத்தைத் தயாரிக்குமோ, அந்த மாதிரித்தான் இந்த வரவு-செலவுத் திட்டம் காணப்படுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

“அடுத்து, இந்தத் திட்டத்தில் பொதுமக்கள் மகிழ்ச்சியடையக் கூடிய எந்த ஒரு குறிப்பையும் அமைச்சர் காட்டமுடியவில்லை. இந்த அரசாங்கம் ஜனநாயக முறையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால்தான் அமைக்கப்பட்டது என்றாலும், “இந்த ஜனநாயகத்தின் மிக முக்கியமான பகுதியாக நிற்பவர்கள் ஜனங்கள்தான் என்பதும், அந்த ஜனங்களுடைய வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது என்பதும், உயர்ந்துள்ள உணவுப் பொருள்களின் விலை இறங்கினாலொழிய ஏழைகளின் மென்னியைப் பிடிக்கின்ற நிலைமைதான் நிலவும் என்பதும், உணவுப் பொருள்களின் விலையை இறக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கே உண்டு என்பதும், அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறும் அரசாங்கம் நல்ல ஜனநாயக அடிப்படையை உணர்ந்தது ஆகாது என்பதும்”—இந்தத் திட்டத்தினால் உணர்த்தப்படவில்லை. இதை உணர்ந்து செயலாற்றுவதற்கு முயற்சி செய்திருப்பதாகவும் குறிப்பிட்டுக்காட்ட முடியாது.

“உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், கடவுள் புண்ணியத்தால் மழை பெய்தும், ஆறுகளிலும் ஏரிகளிலும் தண்ணீர் நிறைந்தும், பொதுமக்கள் விவசாயத்தைத் தட்டுத்தடை இல்லாமல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டும், அதற்கு ஏராளமாகப் பணம் ஒதுக்கப்பட்டும், இருக்கும்போது — இவ்வளவிற்குப் பிறகும் — உணவுப் பொருள்களின் விலை இறங்கவில்லை என்றால், ஏதோ ஒரு பெரிய குறைபாடு அரசாங்கத்தின் திட்டத்திலோ, நிர்வாக இயந்திரத்திலோ, நிர்வாகத்தில் உள்ளவர்களின் மனப்பான்மையிலோ இருக்கிறது என்பதை ஜனநாயக அரசாங்கத்தை நடத்துபவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

“தமிழ் நாட்டிற்கு அவசியமான முன்னேற்றத் திட்டங்களை ஆரம்பித்து நிறைவேற்றுவது பற்றி அரசாங்கத்தார் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால், அந்த நோக்கிலும் ஏமாற்றம்தான் அடைகிறோம்; திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டு மூலதனத்தில் நமக்கு மாற்றுச் செலாவணி கிடைக்காததால் வெளிநாட்டுக் கடன்வாங்க

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவை ஆளுவது உ. பி. மாநிலமே!

டில்லி அதிகாரக்கோட்டை தகர்க்கப்பட வேண்டும்

மாநிலங்களுக்கு மக்கள் சபையில் சமத்துவம் தேவை

வலக் கரத்தால் வரி வசூலித்து டெல்லி இடக்கரத்தால் கடனாகத் தருகிறது

மேல் (சட்ட) சபையில் டாக்டர் வி. கே. ஜான் உண்மை விளக்கம்

சென்னை, ஜூலை 4—

டெல்லியில் அதிகாரங்கள் அனைத்தும் குவிந்து கிடப்பதை வன்மையாகக் கண்டித்தும், ‘மாநிலங்களுக்கு சுதந்திரம் வேண்டும்’ என்று வற்புறுத்தியும் சென்னை (மேல்) சட்டசபையில் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் டாக்டர் வி. கே. ஜான் அவர்கள் குரலெழுப்பியிருக்கிறார். அவர் கூறியதன் சாரமாவது:—

“இந்த மாநிலத்தில் உள்ள மக்கள்மீது மத்திய சர்க்கார் வரி விதிக்கிறார்கள். வலது கையால் இங்கிருந்து பெற்றுக் கொண்டதைத்தான் இடது கையால் இங்குள்ள சர்க்காருக்குக் கடனாகத் தருகிறார்கள். இந்தக் கடனை நாம் திருப்பித் தரத் தேவையில்லை; ஏனெனில், டெல்லி சர்க்கார் கடனாகத் தரும் பணம், நம்முடைய பணம்தான்! எனவே, மத்திய சர்க்காருக்கு நாம் தர வேண்டியுள்ள கடனை எல்லாம் ரத்து செய்து விடுங்கள்.

“சென்னை சர்க்காரின் ‘பட்ஜெட்’ மத்திய சர்க்கார் பட்ஜெட்டின் ஒரு அநுபந்தமாகவே இருக்கிறது.

“அதிகாரங்கள் அனைத்தும் டெல்லியில் குவிந்திருப்பதை மாநிலங்களுக்குப் பரவலாக்க வேண்டும்.

“வெளி விவகாரங்கள், செய்திப் போக்குவரத்து, தற்காப்பு இந்த விவகாரங்களை மட்டுமே கவனிக்கக்கூடிய அதிகாரத்தை மத்திய சர்க்கார் படைத்திருக்கவேண்டும்; எஞ்சிய விவகாரங்களை, மாநில சர்க்கார்களே கவனித்துக்கொள்ள வேண்டும்.

“மத்திய மந்திரி சபையிலும், மக்கள் சபையிலும், மாநிலங்கள் அனைத்திற்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.

“இப்போது உள்ள நிலையில், உத்திரப்பிரதேசம்தான் இந்தியாவை ஆண்டுகொண்டிருக்கிறது!”

நம் நாடு

சென்னை 5—7—57 வெள்ளி

ஜூலை - ஏழாம் நாள்!

ஜூலை திங்கள் ஏழாம் நாள்!

நமது கழக வரலாற்றில் சிறப்பான நாளாகும்.

கழக உறுப்பினர்கள், கழக அனுதாபிகள் அனைவரும் கைகோர்த்துக்கொண்டு செயலாற்ற வாய்ப்பளிக்கும் நன்னாளாகும்.

பொதுமக்கள் துயர் களைய, துன்பம் துடைக்க, கழகம் கொண்டுள்ள நல்லெண்ணத்தை நாட்டு மக்கள் அனைவரும் அறியச் செய்யும் சிறப்பு நாளாகும்.

ஆட்சிபீடத்தில் ஏறி இருப்பவர்களால் இயற்றப்படும் கேடுகளை அவர்களுக்கு உணர்த்தவும், அக்கேட்டினைத் திரும்பப் பெற அவர்களுக்கு வலியுறுத்தவும் எப்படி நாட்டு மக்கள் செயல்படவேண்டும் என்பதை பொது மக்களும் கழகத் தோழர்களும் மீண்டும் பயின்று கொள்வதற்கு அமைந்துள்ள நன்னாள்—அந்த ஏழாம் நாள்.

டெல்லியில் கொலுவீற்றிருக்கும் காங்கிரசு ஆளவந்தார்கள், ஏழை மக்களையே பெரிதும் பாதிக்கின்ற வரிகளை ஏராளமாகப் போட்டுள்ளனர்.

அதன் விளைவாக, இன்றியமையாத் தேவைகளாக உள்ள பண்டங்கள் அனைத்தும் விலையில் கூடி உள்ளன.

ஏற்கனவே இருந்த வரவுக்கு மிஞ்சிய செலவை மேலும் பெருகச் செய்துள்ளன அப்புது வரிகள்.

வரவும்-செலவும் சரிகட்ட முடியாமல் தினசரி வாழ்க்கையில் நாட்டு மக்கள் அல்லல்படுகின்றனர் — அவதிப்படுகின்றனர்.

விதிக்கப்பட்டுள்ள கூடுதலான வரிகள், ஏற்கனவே குறைந்துகிடந்த பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தை வருத்தும் எல்லைக்குக் குறைத்துவிட்டிருக்கின்றது.

இந்த அவல நிலையிலிருந்து மக்களுக்கு மீட்சி ஏற்பட வேண்டும். மீளும் வழிவகைகளை ஆளவந்தார்களுக்கு வற்புறுத்தல் வேண்டும்.

டில்லி காங்கிரசு ஆளவந்தார்களின் தொல்லைதரும் வரிவிதிப்புகளை, நாம் வாழும் தமிழகப் பகுதியில் உள்ள மக்கள் சபை உறுப்பினர்களிடம், அவர்கள் ஒவ்வொருவரும் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல், அவர்களிடம் தூது சென்று முறையிட வேண்டும் என்ற முடிவிற்கு, நமது கழகக் காவலர் பொதுச்செயலாளர் நுணுகி ஆராய்ந்து வந்துள்ளார்.

"திணிக்கப்பட்டுள்ள புதுவரிகளால் மக்கள் படும் வேதனையை டில்லி காங்கிரசு ஆளவந்தார்களிடம் 'எடுத்துக் கூறுங்கள்—ஏற்ற பரிகாரம் கோருங்கள்' என மக்கள் சபை உறுப்பினர்களை அணுகி முறையிட்டுக்கொள்ள வேண்டும்" எனப் பொதுச்செயலாளர் ஆணை பிறப்பித்திருக்கின்றார், கழகச் செயல் வீரர்களுக்கு!

அப்புனிதப் பணிக்கு, தங்களால் இயன்ற அளவிலும் வகையிலும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என பொது மக்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொண்டுள்ளார் நமது பொதுச்செயலாளர். இப்பெருநெறியைத் தவிர வேறு முறை ஏது, ஆளவந்தார்களால் இழைக்கப்படும் குறைகளைப் பொதுமக்கள் களைந்து கொள்வதற்கு? இதுதானே, மக்களாட்சி செப்பனிட்டுள்ள செம்மையான பாதை!

பொதுமக்களைத் துன்புறுத்தும் புது வரிகளுக்கு எதிராக நமது கழகம் மட்டுமா கண்டனக் குரல் எழுப்பியுள்ளது? எதிர்க் கட்சிகள் அனைத்தும் தான் புதுவரிகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளன. அது மட்டுமா?

அப்புது வரிகளுக்குக் காங்கிரசுக் கட்சிக்குள்ளும் பலத்த எதிர்ப்புண்டு! மக்கள் சபை உறுப்பினர் அனைவருக்கும் அவ்வெதிர்ப்பில் பங்குண்டு!

காங்கிரசுப் பெருஞ்சபையின் பொதுச்செயலாளரே அவ்வரிகளைக் கண்டித்துள்ளார். அக்கண்டன விளக்கத்தை, காங்கிரசு பெருஞ் சபையின் சார்பில் வெளியிடப்பட்டுவரும் ஏடே தாங்கிக் கொண்டுள்ளது.

நாட்டு மக்களின் மனப்போக்கை, உள்ளக்கிடக்கையை ஏற்றுக் கொண்டு, அதன்வழி தனது செயல்முறையைஅமைத்துக்கொள்ள வேண்டியது, உண்மையான மக்கள் பிரதிநிதிகளின் கடமை என்பதை மக்களாட்சி முறை நமக்கெல்லாம் போதித்துள்ளது. மக்களாட்சி முறையின் இவ்வலிய அடிப்படை போதனையை, நாம் அறிந்திருப்பது போன்றே காங்கிரசு கட்சியைச் சேர்ந்துள்ள மக்கள் சபை உறுப்பினரும் அறிந்திருப்பர் எனக் கொள்வதில் தவறு இல்லை. அவ்வுயர்ந்த நம்பிக்கையின் மீதே, ஜூலை திங்கள் ஏழாம் நாள், கழக உறுப்பினர்களும் அனுதாபிகளும் பொதுமக்கள் புடை-சூழ, அந்தந்தத் தொகுதியில் உள்ள மக்கள் சபை உறுப்பினர்களை, கட்சி வேற்றுமை பாராது அணுகப் போகின்றனர்; மக்களை வாட்டி வதைக்கும் புது வரிகளை உடனடியாக நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முன்வரும்படி வேண்டிக்கொள்ளப் போகின்றனர்.

கட்டுப்பாடு ஒளி வீசும்—கண்ணியம் மனம் கமழும்—கடமை இதயத்தைத் தொடும்—நமது கழகத்தவர் பங்கேற்கும் பொதுப் பணிகளில் என்பது, ஏற்கனவே பலமுறை நிலைநாட்டப்பட்டுள்ளத் தனிப்பெரும் படிப்பினையாகும். அதற்கு அணி செய்வது போன்றே, ஜூலை ஏழாம் நாள் நமது கழகத்தவர் செயலாற்ற இருக்கும் நிலையும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

வழக்கம்போல், ஊர்வலத்திற்கான அனுமதியை. ஆங்காங்கே உள்ள பாதுகாப்புத் துறையினரிடமிருந்து உரித்த காலத்தில் கழகத்தவர் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுவது மிகையாகும். நமது கழகத்தவர் 'செய்வனத் திருந்தச் செய்வர்' என்பது தெளிவு.

ஆர்வம் குன்றுதீர்—அமைதி கெட இடமளியாதீர்—கடமையே கண்ணுயிருங்கள்—எடுத்த பணி வெற்றிகரமாக முடிவுறும்.

வரிகளின் விளைவுகளை விளக்கிக் கூறுங்கள்! அவை, மக்களை பாதிக்கும் வகையினைத் தெளிவுபட இயம்புங்கள்! புது வரிகள் மூலம் கிடைக்கப்பெறும் மிகுதி வருமானத்தைச் செலவிடப்படும் துறை பற்றி விளக்கமளியுங்கள்! இரண்டாம் திட்டத்திற்கும் புது வரி விதிப்புகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானத்திற்கும் கடுகளவுத் தொடர்பும் இல்லை என்பதை எடுத்தோதுங்கள்!

ஜூலை திங்கள் ஏழாம் நாள் வெல்க! நமது புனிதப் பணி வெற்றி பெறுக!

புது வரிகள் தொலையட்டும்! மக்கள் சபை உறுப்பினர்கள் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாகத் திகழட்டும்!

இனி என்ன குறை?

ஒரே மாதிரி சம்பளம் தருமாறு உத்தரவாம்!

சென்னை, ஜூலை 4—

ஸ்தல ஸ்தாபனங்களும், உதவி பெறும் நிர்வாகங்களும் நடத்தும் ஆரம்பப் பள்ளி—நடுநிலைப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் சம்பள விகிதங்களிலுள்ள வேற்றுமையைப் போக்கி 1—11—56 முதல் ஒரே மாதிரி சம்பள விகிதம் (ரூ. 45-2-85) வழங்க வேண்டுமென சர்க்கார் உத்திரவிட்டுள்ளதாக மேல் சபையில் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சேதி, தெரியுமா?

உலக நாடுகள் எல்லாம் சேர்ந்து மொத்தம் ஆண்டொன்றிற்கு 500 கோடி புத்தகப் பிரதிகளை வெளியிடுகின்றனவாம்; ஆனால் ரஷ்யா மட்டும் 100 கோடி புத்தகப் பிரதிகளை வெளியிடுகிறதாம்! அதாவது உலகப் புத்தக உற்பத்தில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் அதிகமாக உற்பத்தி செய்கிறது.

1955-ல் ரஷ்யா 54,732 புதிய புத்தகங்களை வெளியிட்டது; ஆனால் அதே ஆண்டில் பிரிட்டன் 19,692 புத்தகங்களையும், மேற்கு ஜெர்மனி 15,837 புத்தகங்களையும், அமெரிக்கா 12,589 புத்தகங்களையும், பிரான்சு 11,793 புத்தகங்களையும் வெளியிட்டன' என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

பொருள்களைப் பதுக்கி வைத்து இலாபம் பெற எண்ணுகின்றனர்?

கடன் தருவதில் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு பாங்கிகளுக்கு உத்தரவு

பம்பாய், ஜூலை 4—

"விவசாயப் பொருள்களைப் பதுக்கி வைத்து இலாபம் பெற முயற்சிப்பவர்கள் விஷயத்திலும், இப்போதைய கடுமையான இறக்குமதிக் கொள்கையின் விளைவாக, இறக்குமதி லைசென்ஸ் இல்லாத பொருள்களைப் பதுக்கி வைத்து, கிராக்கி ஏற்படும் நேரத்தில் இலாபம் பெற எண்ணுபவர்கள் விஷயத்திலும் பாங்கிகள் கடன் தருவதில்முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று, பாங்கிகளுக்கு அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையில் ரிசர்வ் பாங்கி கவர்னர் குறிப்பிட்டுள்ளார்.

"பாங்கிகள் கடன் தருவது சென்ற இரு ஆண்டுகளாக அதிகரித்து வந்திருக்கிறது. 1955 ஜுன் மாதத்தில் ரூ. 613 கோடியாக இருந்த கடன் தொகை 1957 ஜுன் மாதத்தில் ரூ. 932 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் மேலும் உயரக் கூடிய வாய்ப்பு இருப்பதால் பாங்கிகள் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சர்க்கரை விலை உயர்வை தடுக்க நடவடிக்கை

கடனை கட்டுப்படுத்த முடிவு

பம்பாய், ஜுன் 4—

இவ்வருடத்தில் சர்க்கரை உற்பத்தி முன்னைய ஆண்டைக்காட்டிலும் விலை உயர்ந்திருக்கிறது; எனவே, சர்க்கரைமீது பாங்கிகள் அதிகமாக முன்பணம் கொடுப்பதைத் தடுப்பதற்கு ரிசர்வ் பாங்கி விசேட நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. இதன்படி கையிருப்பு சரக்கை ஈடுவைத்து பாங்கிகளிலிருந்து பெறப்படும் முன்பணத் தொகை இனி குறைக்கப்பட்டுவிடக்கூடும்.

மத்திய அரசாங்கத்தின் 'பட்ஜெட்'டில் சுங்க வரி விதிக்கப்பட்ட நேரத்தில் ஒரு மணங்கு சர்க்கரை ரூ. 28-க்கு விற்கப்பட்டது; விதிக்கப்பட்ட சுங்க வரியான 4 ரூபாயைக் கூட்டிக் கணக்கிட்டாலும் இப்போது சர்க்கரை மணங்கு ரூ 32-க்கு விற்கப்பட வேண்டும்; ஆனால் இப்போது மணங்கு ரூ. 35½ விலைக்கு விற்கப்படுகிறது.

சர்க்கரை மீது இந்த ஆண்டில் பாங்கிகள் மொத்தம் ரூ. 60கோடி கடன் தந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தேசீயமயமாக்குவது சாத்தியம் இல்லையாம்!

க. அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜூலை 4—

"மதுரை ஆலைகள் ஜுன் 26-ந் தேதி முதல் 'கதவடைப்பு' செய்யப்பட்டுள்ளது; ஆலையை மூடுவதற்குமுன் ஆலை அதிபர்கள் அரசாங்கத்திற்கு அறிவிக்கவில்லை. இப்போதும் அரசாங்கம் நிலைமையைக் கவனித்துவருகிறது; இதனால் 14,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று தொழில் அமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

க. அன்பழகன் :— "முதலாளிகளுக்கும்—தொழிலாளர்களுக்கும் தகராறுகள் ஏற்படுவதின் காரணமாக நாட்டிற்கு நஷ்டம் ஏற்படுவதால், தவறிழைக்கும் நிறுவனங்களை அரசாங்கம் ஏற்று நடத்த முன்வருமா?"

அமைச்சர் :—'அவ்வாறு செய்வது சாத்தியமில்லை.'

ஏ. கோவிந்தசாமி :— "தொழிற் சங்கத்தில் அனுபவம் பெற்றுள்ள அமைச்சர் மீண்டும் அங்கு சென்று சமரசம் செய்து வைக்க முற்படுவாரா?"

அமைச்சர்:—'நிச்சயம் முற்படுவேன்.'

திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில்பண்ணை

க. அன்பழகன் கேள்வி

சென்னை, ஜூலை 4—

'திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு தொழில் பண்ணை ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முடிவு செய்து, இடத்தையும் தேர்ந்தெடுத்துள்ளது' என்று அமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

இந்தத் தொழில் பண்ணை நிறுவ தண்ணீர் போன்ற வசதி அங்கு அதிகமாக உள்ளதாம்.

க. அன்பழகன் :—"வேறு பகுதிகளில் உள்ள தொழிலாளர்களை அங்கு குடியமர்த்தும் நோக்கம் உண்டா?"

அமைச்சர் : — 'அவ்வாறு செய்ய வேண்டிய நிலை ஏற்படவில்லை.'

திருவண்ணாமலை— செங்கம் பஸ்

ப. உ. சண்முகம் கேள்வி: அமைச்சர் பதில்

சென்னை, ஜூலை 4—

திருவண்ணாமலையிலிருந்து செங்கம் வரையில் ஓடும் பஸ்களைக் குறைத்துவிட்டது உண்மைதான் என்றும், சிங்காரப்பேட்டை வரையில் 'மெயில் பஸ்' விடப்பட்டுள்ளது உண்மை என்றும், அவ்வாறு செய்ய வட்டாரப் போக்குவரத்து அதிகார இலாகா கருதிபது என்றும், அமைச்சர் இராமய்யா, கழக உறுப்பினர் ப. உ. சண்முகம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

திருச்சியில் எண்ணெய் செல்வம் உண்டா?

அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 4—

திருச்சி மாவட்டத்தில் எண்ணெய்ச் செல்வம் உள்ளதா என்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறதாம்.

'அந்த ஆராய்ச்சி முடிந்த பின்னர், அதுபற்றி அறிவிக்கமுடியும்' என்று சட்டசபையில் தொழில் அமைச்சர் தெரிவித்தார்.

மதுரையில் ஒரு தமிழ்க் கல்லூரி

தமிழ்ச் சங்க ஆதரவில் துவக்கம்

சிறப்பான முயற்சி என நாவலர் பாரதியார் பாராட்டு

மதுரை, ஜூலை 3—

மதுரையில் தமிழ்க் கல்லூரி ஒன்று, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் துவங்கப்பட்டிருக்கிறது.

தமிழ் இலக்கிய பட்டப் படிப்புக்கான இந்தக் கல்லூரியில், இந்த ஆண்டில் வித்துவான் படிப்பு துவங்கும் என்று தேரிகிறது.

மாநிலத்தில் ஏற்கனவே இது போல 5 கல்லூரிகள் இருக்கின்றன.

இந்தக் கல்லூரியை, நாவலர் சோமசுந்திரபாரதியார் துவக்கி வைத்து, தமிழ் வளர்த்த மதுரையில் இக்கல்லூரி அமைவது சிறப்பானது என்றும், அதனினும் சிறப்பாக, கல்லூரியை தமிழ்ச் சங்கமே துவங்கியிருப்பது அமைந்திருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

தமிழ்ச் சங்கத் தலைவரான தமிழ்வேள் பி. டி. இராசன் அவர்கள், கல்லூரி மென்மேலும் வளர்ந்து, தமிழ் வளரப் பாடுபட வேண்டும் என்ற தனது வேட்கையை வெளியிட்டார்கள்.

சங்கச் செயலாளரான, வி. சண்முகசுந்தரம் அவர்கள், 'தமிழ்ப் பெருமக்கள் சங்கத்தின் நிதிக்குப் பெருமளவு பணம்தந்து கல்லூரி சிறப்பாகத் திறனோடு பணியாற்றத் துணைபுரிய வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

‘ஒன்றரை பணத்துக் குதிரை இரண்டரை பணத்துக்குக் கொள்ளு தின்றது’போல!

‘சர்க்காரின் மின்சார வினியோக, சமுதாய நலத் திட்டங்கள் இருக்கின்றன’

‘ஏட்டுச் சுரைக்காய்’ கூட்டுக்கு உதவாது’

சட்டசபையில் தோழர் எஸ். எம். அண்ணாமலை

சென்னை, ஜூலை 2—

இன்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது கழக உறுப்பினர் களம்பூர் எஸ். எம். அண்ணாமலை அவர்கள் பேசியதன் சுருக்கம் இங்கே தரப்படுகிறது:—

“வரவு-செலவுக் கணக்கைப் பார்க்கும்போது எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. தெனாலிராமனை அரசன் கூப்பிட்டு, குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு வரச்சொன்னபோது, அவன் குதிரையைக் குளத்திற்குப் பிடித்துக்கொண்டு போய், ‘அதோ அங்கே தண்ணீர் இருக்கிறது,’ என்று குதிரையிடம் காட்டிவிட்டு, மறுபடியும் குதிரையைப் பிடித்துக்கொண்டு வந்து இருந்த இடத்திலேயே கட்டிவிட்டானாம். அந்தமாதிரிதான் இந்த வரவு-செலவுத் திட்டம் இருக்கிறது. உண்மையிலேயே பாமர மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கு என்றும், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்திற்கு என்றும் பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. இந்தத் திட்டங்களால் யார் யார் பயனடைகிறார்கள் என்று ஆலசிப்பார்த்தால், பயனடைபவர்கள் பணக்காரர்களேயொழிய, மத்தியதர வகுப்பினர்களும் பாமர மக்களும் பயனடையவில்லை என்று தெரிகிறது.

“உதாரணமாக, ஐந்து ஏக்கர் நிலமுடைய ஒருவன் தனக்கு ரூ. 1,000 கடன் வேண்டுமென்று விண்ணப்பித்தால், உடனே அவனுக்குக் ‘கட்டுப்பட்டா’ இருக்கிறதா என்றும், அல்லது ‘விஸ்வங்கம்’ ஏதாவது இருக்கின்றதா என்றும் ‘சர்டிபிகேட்’ வாங்கிவர வேண்டும் என்றும் சொல்கிறார்கள்; இதனால் அவன் கடன் பெற முடியாமல் போய்விடுகிறது; ஆகவே, ஏழை விவசாயிகளும் பாமர மக்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர்.

“சமுதாய நலத் திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றால் பயன் பெறுபவர்கள் பணக்காரர்களே தவிர, ஏழை விவசாயிகள் அல்ல: பெரும் நிலக்கிழார்கள்தான் விவசாயிகளாகக் கருதப்படுகிறார்களே தவிர, உண்மையிலேயே இந்த நாட்டில் உழைத்துவிட்டு, கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கஷ்டப்படும் பாமர மக்களைப் பற்றி அரசியலாளர் சிந்திப்பதில்லை.

“சமுதாய நலத் திட்டம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களினால் மலைசாதி மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை; இந்தத் திட்டங்களைப் பற்றியே அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அந்த மலைநாட்டு மக்களுக்கும் திட்டங்களின் பலன் கிடைக்குமாறு செய்யவேண்டும்.

“தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மானிய உதவித் தொகை தருவதாகக் கூறப்படுகிறது; அத்தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்காக நான் கிராமங்கள் தோறும் சென்று அவர்களுடைய கையெழுத்துக்களைப் பெற்று சுமார் 2,000 விண்ணப்பங்கள் வரையில் அரிசன நல இலாகா அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன்; இதுவரையிலும் அவைகளில் ஒரு விண்ணப்பம் கூட பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தத் திட்டங்கள் பணக்காரர்களுக்குத்தான் பயன்படுகின்றனவே தவிர, பாமர மக்களுக்குப் பயன்படுவதாகக் காணோம்.

“செந்திரி இரசாயன உரம் விவசாயத்திற்குப் பயன்படுவதைவிட கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கே அதிகம் பயன்படுகிறது; அதனால் அந்த உரம் ‘கள்ளமார்க்கெட்’ விலையில்தான் விற்கப்படுகிறதே தவிர, சாதாரணமாகக் கிடைப்பதில்லை.

“கிராமப் பகுதிகளில் 13,000 ‘பம்பு செட்டு’களுக்கு மின்சார வசதிகள் அளிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்பிரச்சினையில், ‘குறைந்தபட்ச ஒப்பந்தம்’ மிகத் தொல்லையாக இருக்கிறது. ‘ஒன்றரைப் பணத்திற்கு வாங்கிய குதிரை இரண்டரைப் பணத்திற்குக் கொள்ளு தின்றது’போல, இந்த ஒப்பந்தம் இருக்கிறது; இந்த ஒப்பந்தத்தின் மூலம் அதிக தொகையை வரையறுத்து வசூல் செய்கின்றனர்; ஆனால், நீர் இறைக்க வழங்கப்படும் மின்சாரமோ மிகக் குறைவாகும்.

“பல கட்டுப்பாடுகளை இந்த ஒப்பந்தத்தில் விதிப்பதின் மூலம் விவசாயிகள் அந்த ‘பம்பு செட்டு’களைப் பயன்படுத்த முடியாதபடி மின்சாரத்தை நிறுத்திவிடுகிறார்கள்; நல்ல இறைப்பு காலத்தில் அவைகளை இயக்க முடிவதில்லை; 5 ஏக்கர் நிலமுள்ள விவசாயி, 2 ஏக்கருக்குத்தான் அதன் மூலம் தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. பாமர மக்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெற இயலவில்லை. எனவே, இந்த ஒப்பந்த முறையை ரத்து செய்து, பயன்தரும் முறையில் திட்டம் தீட்ட வேண்டும் என்று கோருகிறேன்.

“தலையாரிகளும் தோட்டிகளும் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளனர். ரூ. 4 சம்பள உயர்வு தருவதுடன் மட்டுமின்றி அவர்களுக்கு உடனடியாக நல்ல ஆடைகள் வழங்குமாறு கோருகிறேன்.

“உணவு உற்பத்தி அதிகமாகிவிட்டது என்று புள்ளிவிவரம் கொடுத்துவிட்டு, அதே சமயத்தில், விலைவாசிகள் உயர்ந்துவிட்டது என்று கூறுகிறார்கள். இதற்கு உண்மையான காரணம் என்னவென்று தெரியவில்லை. விளைச்சல் பெருக்கம் சம்பந்தமாக கிராமக் கணக்குப்பிள்ளைகள் தரும் கணக்குகளைக்கொண்டு உண்மையான நிலையை நாம் அறியமுடியாது. ‘ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது,’ என்பதுபோல, இருக்குமிடத்திலேயே உட்கார்ந்துகொண்டு சாகுபடி கணக்கைத் தரும் தவறான புள்ளிவிவரங்கள் உண்மையான நிலைமையை அறிவதற்கு உதவாது; எனவே, கணக்குப்பிள்ளைகள் ‘சர்வே எண்’ நிலங்களுக்கு நேரில் சென்று சாகுபடி கணக்கைத் தருவதற்கு அரசியலார் ஏற்பாடு செய்யவேண்டும்.”

‘சிறிய நீர்ப்பாசன வசதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன’

‘வருங்கால நன்மையைக் காட்டும் அமைச்சர் நிகழ்காலம் பற்றி எண்ணவில்லை’

சட்டசபையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கண்டனம்

சென்னை, ஜூலை 4—

இன்று வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது கழக உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் சட்டசபையில் பேசியதின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

“நிதி அமைச்சர் வரவு—செலவுத் திட்டத்தை வெளியிட்டதன்மையைப் பாராட்டுகிறேன். நான் இதே அவையில், ‘தமிழ் நிர்வாக மொழியாக்கப்பட வேண்டும்’ என்று பேசுகையில், ‘ஸ்ரீ’, ‘ஸ்ரீமதி’க்குப் பதில் ‘திரு’, ‘திருமதி’ என்று பயன்படுத்தலாமே என்று யோசனை கூறினேன். ஆனால் நிதி அமைச்சர், ‘அவசியமில்லை’ என்று கூறிவிட்டார். இப்போது அவர் தந்துள்ள திட்டத்தைப் பார்க்கும்போது அவரே ‘திரு’ என்று பயன்படுத்தி இருப்பது போற்றத்தக்கது. அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்—போற்றுகிறேன்.

“முதலில் ஆட்சேபித்து, பின்னர் அதையே பின்பற்ற முன்வந்துள்ளார் என்பது ஒன்றும் புதிதல்ல.

இந்தச் சமயத்தில் நிதி அமைச்சர் குறுக்கிட்டு, ‘அப்படி நீங்கள் சொன்ன பிறகு நான் போடவில்லை’ என்றார்!

உடனே தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், 30 ஆண்டுகளாக நான் சொன்னதைத்தான் எனது இயக்கமும் கூறிவந்துள்ளது’ என்று கூறிவிட்டு மீண்டும் திட்டத்தை பற்றிப் பேசியதாவது:—

“இதிலிருந்து, நாங்கள் சொல்வதில் எப்போதும் நியாயம் இருக்கும் என்பது தெரியவரும்.

“வரலாற்றைப் புரட்டி பார்க்கும்போது, சிவாஜிக்குப் பின்னால் ஆண்ட பீஷ்வாக்கள் காலத்தில் இருந்த வரவு—செலவு திட்டம் போன்றுள்ளது, நமது நிதி அமைச்சரின் பட்ஜெட்!

“அந்தக் காலத்தில் விதிக்கப்பட்ட வரிகளைப் போன்றே இவரும் வரிகள் போட்டுள்ளார்.

“10 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தும் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. நாட்டிற்குத் தேவையானது உள்ளதா, அதற்குப் பணம் ஒதுக்கப் பட்டுள்ளதா என்று பார்த்தால், இந்த திட்டத்தில் ஒன்றையும் காணோம்!

“மக்களுக்கும் ஒன்றும் இல்லை—ஆனால், அரசாங்கத்திற்குப் பணம் கிடைக்கிறது!

நிதி அமைச்சர், 5 ஆண்டுகள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படப்போகும் நன்மைகளைப் பற்றிக் கூறியுள்ளார். ஆனால் உடனடியாக என்ன?

“பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் வடக்கே உள்ளது; தெற்கே ஏன் இல்லை என்றால், கனம் காமராசர் அவர்கள், ‘இங்கு ஜீவநதிகள் இல்லை’ என்று கூறுகிறார். இப்படி இருந்தாலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றுமே இல்லை.

“அரியலூர் விபத்திற்கு நாங்கள் சென்னையைக் குற்றம்சாட்டுவதற்குக் காரணம் அங்கு ஏரி உடைந்ததால் ஏற்பட்ட விளைவுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்படி சிறிய நீர்ப்பாசன வசதிகளைப் பாதுகாக்காததும், புறக்கணிப்பதும் தவறாகும்.”

‘திட்டத்தில் நல்வாழ்விற்கிடமில்லை’

சட்டசபையில் ப. உ. சண்முகம் கண்டனம்

சென்னை, ஜூலை 4—

இன்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கழக உறுப்பினர் ப. உ. சண்முகம் கலந்துகொண்டு திட்டத்தை வன்மையாகக் கண்டித்தார்.

அவர் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இங்கே தரப்பட்டுள்ளது:—

“ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சிகளை மதித்து, அவர்கள் எடுத்துரைக்கும் உண்மைகளை ஆராய்ந்து மதிப்புதர முன்வர வேண்டும்.

“நிதி அமைச்சரின் திட்டம் ஏதோ ஒரு ஆண்டு அறிக்கையைப்போல உள்ளதே தவிர, நம்பிக்கையூட்டும் வகையில் தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை. பற்றாக்குறைத் திட்டம் தயாரிப்பது மிகவும் வருந்தக்கூடியதாகும்.

“மக்களின் நல்வாழ்வை மனதில் கொண்டோ, இன்று நாட்டில் நிலவிடும் நிலைமையை ஆராய்ந்தோ வரவு-செலவுத் திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை.

“மூலதனத்திற்காக அரசாங்கம் செலவிடும் தொகையை சென்ற ஆண்டைப்போலவே குறைத்துக்கொண்டு, வேறு பல நல்ல ஆக்க வேலைகளுக்கு அந்தத் தொகை செலவிடப்பட வேண்டும்.

“இன்று நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மக்களுக்கு உதவியாக இல்லை.

“வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகாரிகள் மக்களை மிரட்டியும், தொல்லைகளைத் தந்தும் கஷ்டப்படுத்தி வருகின்றனர். இந்த நிலைமை மேலும் அதிகரித்துவருகிறது.

“எனவே, அரசாங்க நிர்வாகத்தில் உள்ள ஊழியர்கள் கடமை உணர்வுடன் மக்களை மதித்துப் பணியாற்றச் செய்யவேண்டும் என்று அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறேன்.”

தெரிந்துகொண்டனர்?

சென்னை, ஜூன் 4—

இன்று சட்டசபையில் வரவு-செலவுத் திட்டத்தின்மீது கழக உறுப்பினர் ப. உ. சண்முகம் பேசுகையில், ‘எதிர்க்கட்சி உறுப்பினர்கள்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்திப் பேசுகையில், நிதி அமைச்சர் குறுக்கிட்டு, ‘அங்கத்தினர், சபைத் தலைவர் என்று பேச வேண்டு’மென்று கூறினர்.

‘நயே’ காங்கிரஸ்காரர் கே. விநாயகம் குறுக்கிட்டு, ‘அவர்கள் அப்படிப் பொதுக்கூட்டங்களில் பேசி பழக்கம்’ என்றார்.

உடனே ப. உ. சண்முகம் அவர்கள், ‘நான் ஊராட்சி மன்றத்தின் தலைவனாகவும் இருந்தவனேன்’ என்று கூறினர்.

‘நானும்தான் நகரசபை உறுப்பினனாக இருக்கிறேன்’ என்று விநாயகம் அவர்கள், தன்னைப் பற்றி எவரும் கேட்காமலே கூறி திருப்தியடைந்தார்.

கடம்பா குளத்தை எடுத்துக்கொண்டதேன்?

சென்னை, ஜூலை 4—

திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள கடம்பா குளத்தை அரசாங்க மீன் இலாகா எடுத்துக்கொண்டதென்றும், மீன்களுக்கான நல்ல தண்ணீரை பெறவே இவ்வாறு செய்யப்பட்டதென்றும், அமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

கல்விச் சலுகை உத்தரவில் மாறுதல்

அரசாங்க அறிக்கை

உயர்தரப் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகை உத்தரவில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

துவக்கப்பள்ளிகளில் மாணவர்கள் தவறியிருப்பது, உயர்தரப் பள்ளியில் கல்விச் சலுகை அளிப்பதில் கவனிக்கப்படமாட்டாது. இச்சலுகை ஏழைக் குழந்தைகளுக்கும், சென்னை கல்வி விதி 92-ன் கீழ் சலுகை பெறும் குழந்தைகளுக்கும், கெஜட் பதிவில்லாத அலுவலாளர்களின் குழந்தைகளுக்கும் அளிக்கப்படும்.

மற்றொரு உத்தரவு

மாணவர்களுக்குக் கல்விச் சலுகைகள் வழக்கமாகப் பெற்றோரின் வருமானத்தின் பேரிலேயே வழங்கப்படுகின்றன. ஆனால் பர்மா, இலங்கை, மலேயா போன்ற வெளிநாடுகளிலிருக்கும் பெற்றோர்களின் வருமானம் ஆண்டுக்கு ரூ. 1,200-க்கு அதிகமாக இருந்த போதிலும், இந்தியாவிலுள்ள அவர்களுடைய குடும்பங்களுக்குக் குறைவாகவே பணம் அனுப்ப அனுமதிக்கப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை விண்ணப்பம் கொடுக்கும்போது பெற்றோர் வேலை செய்யும் நாட்டு அதிகாரியிடமிருந்து அவர்கள் அனுப்ப அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச தொகை எவ்வளவு என்பதற்கு அத்தாட்சி வாங்கி அனுப்பவேண்டுமென்றும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

வெளிநாட்டிலுள்ள பெற்றோரின் குழந்தைகளுடைய விண்ணப்பங்களில் இங்குள்ள ‘கார்டியன்’களின் கையெழுத்திருந்தால் போதும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நிலவும் ‘அநீதி’களை உடனடியாக நீக்கிவிட இயலாதாம்!

மந்திரி சுப்பிரமணியம் கூறுகிறார்

சென்னை, ஜூலை 4—

உதவி பெறும் ஆரம்பப்பள்ளிகள் பெரும்பாலும் கிராமங்களிலேயே இருப்பதால், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ‘வீட்டு வாடகைப் படி’ கொடுப்பது அவசியமல்லவாம்!

உதவி பெறும் இடைநிலைப் (செகண்டரி) பள்ளி ஆசிரியர்களுக்கு ‘வீட்டு வாடகைப் படி’ கொடுப்பது பற்றிய பிரச்சினை சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறதாம்!

இவ்வாறு கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் மேல் சபையில் தெரிவித்திருக்கிறார்.

‘இடைநிலைப் பள்ளியாசிரியர்கள் ‘வீட்டு வாடகைப் படி’ பிரச்சினையை இரண்டு ஆண்டுகளாக ஆராயப்பட்டுவருகிறதே?’ என்று கிருட்டினமூர்த்தி என்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியபோது, விரைவில் முடிவு செய்வதாக அமைச்சர் வாக்களித்தாரெனவும் தெரிகிறது.

“சென்னையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி எதுவும் கொடுக்கப்படுவதில்லை; அவர்கள், தங்கள் ஊதியத்தில் கால் பாகத்தை வீட்டு வாடகையாகச் செலுத்தவேண்டியிருக்கிறது; குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு மட்டும்தான் இந்தப் ‘படி’ மறுக்கப்படுகிறது. அவர்களுக்கும் இந்தப் படியை வழங்குமாறு ‘நீதி’யின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்” என்று உறுப்பினரொருவர் கூறியபோது கல்வி அமைச்சர் குறுக்கிட்டு ‘சமுதாயத்தில் எவ்வளவோ அநீதிகள் உள்ளன; அவற்றையெல்லாம் உடனடியாக நீக்கிவிட இயலாது’ என்று கூறியிருக்கிறார்.

சட்டசபையில் க. அன்பழகன் முழக்கம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தவக்கம் ஏற்படுகிற காரணத்தால் அந்தத் திட்டங்களை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற முடியாது என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள்.

"குந்தா திட்டத்தை எடுத்துக் கொள்வோம்; அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நமக்கு எவ்வளவோ நன்மை ஏற்படும் என்பதைச் சொல்லும் அரசாங்கத்தார் அதை நிறைவேற்றுவதில் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன என்றும், இருந்தாலும் நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறோம் என்றும் சொல்லுகின்ற நிலையில் தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை மிகமிக வருந்தத் தக்கது ஆகும்.

"இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் பொருளாதாரத் துறையில் உள்ள துன்பங்களைப் பற்றிக் கூறும் அரசாங்கத்தார், செலவில்லாமல் நிறைவேற்றக்கூடிய மக்களுடைய கோரிக்கைகளையாவது நிறைவேற்றுகிறார்களா என்றால், அதுவும் இல்லை.

"இந்த மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் சுதந்திரப் போரில் ஈடுபட்டுப் பல தியாகங்களைச் செய்தவர்கள். அவர்கள், இந்த 'துர்ப்பாக்கியத்திற்கு ஆளான' மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்று கோரினால் அந்த கோரிக்கையும் இந்த அரசாங்கத்தாரால் நிறைவேற்றப்படவில்லை; 'நிறைவேற்றுவோம்' என்று அரசாங்கத்தார் கூறவும் இல்லை; அந்தப் பெயரை இடவேண்டும் என்ற கருத்து அவர்களுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

"அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தையும் நிதி நிலைமையையும் பற்றிப் பரிசீலனை செய்து குறிப்புகள் தருகின்ற அரசாங்க நிபுணர்களே மிகத் தெளிவாக இன்னின்ன துறைகளில் இவ்வளவு இவ்வளவு தொகை, இத்தனை இத்தனை ஆண்டுகளாகப் பாழ்படுத்தப்பட்டிருக்கின்றன என்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப் பார்த்தாலே நிர்வாகத்தில் குறைகள் இருப்பது நன்றாகத் தெரியும். அந்தக் குறைகளுக்கு அமைச்சர்கள் மட்டுமே பொறுப்பாளிகள் என்று நான் சொல்லவில்லை. முன்பு இருந்த சட்ட மன்றமும் அதற்குப் பொறுப்பாக இருக்கலாம்; இன்றுள்ள சட்ட மன்றமும் பொறுப்பாக இருக்கலாம்; நாமும் பொறுப்பில் பங்கு கொண்டவர்களாக இருக்கலாம். ஆகவே, வரவு-செலவுத் திட்டத்திலுள்ள குறிப்புகளிலிருந்து தெரிகிறபடி, அந்த அளவிற்கு நிர்வாகத்தில் குறைகள் இருந்தால், பொதுமக்கள் எப்படி பயன் அடைவார்கள்? 'வேலியே பயிரை மேய்ந்தால்,' என்று ஒரு பழமொழி உண்டு. வேலியே பயிரை மேய்ந்தால், அதன் பிறகு வேலியே வேலியாக இல்லாத நிலையில், ஆடு மாடுகள் பயிரை மேய்வதற்கு யாரை கேட்பது? ஆடு மாடுகள் பயிரை மேய்ந்தபின் பயிர்கள் அழிந்ததற்கு யாரைக் கேட்கவேண்டும்?

"காடுகள் வளர்ப்புத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், காடுகள் வளர்ப்பதற்கு பல இலட்சம் ரூபாய்கள் கொடுக்க முன்வந்தாலுங்கூட, சில பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு உதவுவதற்கு அரசாங்கம் முன்வந்தாலுங்கூட, சில இடங்களில் விவசாயிகளுக்கு அந்த உதவி கிடைக்காதபடி தடை செய்வதில் சிலர் ஈடுபடுகிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு நன்மைகள் செய்வதற்காக அரசாங்கம் இருந்தும்கூட, அந்த நன்மைகளுக்குத் தடையாகச் சிலர் இருக்கிறார்கள். அந்தத் தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு முன்னேற்றப்பணிகளில் இறங்க வேண்டும். அந்தத் தடைகள் இருக்கும்போது எவ்வளவு பணத்தைச் செலவு செய்தாலும், அந்தச் செலவின் பயனை மக்கள் அடையாத காரணத்தால், அவர்கள் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறார்கள்.

"தஞ்சை மாவட்டத்தில் நடக்கும் அக்கிரமங்களைப் பற்றி காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள்கூட மிகத் தெளிவாகத் தெரிவித்தார்கள். அந்த மாவட்டத்தில் உள்ள கடவுள்களுக்குக்கூட நில உடமையில் அதிக ஆசை இருக்கிறது. அங்கே தெய்வங்களுக்காக என்று கோயில்களின் பேரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் உள்ளன. மடாலயங்கள் பேரிலும் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. 'அந்த நிலங்களில் யார் பயிர் செய்கிறார்கள்? அவைகளால் மக்களுக்குப் பயன் விளைகின்றதா?,' என்று பார்த்தால், இவ்வளவு பெரிய அளவில் உள்ள அந்த நிலங்களை அரசாங்கத்தார் கைப்பற்றி ஏழை பாட்டாளி மக்களுக்குத் தந்தாலொழிய மக்கள் பயனடைய முடியாது என்பது தெரிகிறது. ஆகவே, இந்த நிலையில், அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை யெல்லாம் கூட்டுறவு சாகுபடி முறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று பலர் எடுத்துச் சொன்னார்கள். அந்த யோசனையை அரசாங்கத்திற்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

"மடாலயங்களின் சொத்தை பறிப்பதில் திராவிட முன்னேற்றக்கழகத்தாருக்கு தனி அக்கறை என்று எண்ண வேண்டாம். ஆண்டவனுக்குச் சொத்து இருக்கக் கூடாது என்றும், ஆண்டவன் 'இன்சால்வெண்ட்' ஆகிவிட வேண்டும் என்றும் நினைப்பவர்கள்கூட அல்ல, நாங்கள்!

"கடவுள் மக்களின் நன்மைக்காகத்தான் இருக்கிறார் என்ற நியதிப்படி, நிலங்களால் மக்கள் எல்லோரும் பயனடைய வேண்டுமென்ற காரணத்தால், ஏழைகளுக்கும் நிலமில்லாத விவசாயிகளுக்கும் பயன்படுவதற்காக அந்த நிலங்களைப் பெறுவதற்கு அரசாங்கம் உடனடியாகத் திட்டமிடவேண்டும் என்பதுதான் கழகத்தின் நோக்கம் என்பதை அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"அடுத்தாற்போல், மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், அதை இரண்டு மாதங்களாகக் கடுமையாகச் செயல்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், மக்களிடையே மது விலகியிருக்கிறதா அல்லது மதி விலகியிருக்கிறதா என்று பார்த்தால், மதிதான் கொஞ்சம் விலகியிருக்கிறதே தவிர, மது விலகவில்லை என்று தெரிகிறது.

"மதிதான் விலகியுள்ளது என்பது, எதனாலே என்றால், மக்களிடத்தில் அந்தக் கருத்தை—அதன் பயனை நல்ல முறையிலே பரப்பவில்லை. மதுவிலக்கு வெற்றி பெறுவதற்குள்ள காரணங்கள் பலவற்றில் மக்களிடத்திலே அந்தக் கருத்து நல்ல முறையிலே பரப்பப்படாததும் ஒன்று. மற்றொன்று, 'மது குடிப்பது தவறு' என்ற எண்ணமும், 'அது ஒரு சமுதாயக் கேடு' என்ற நினைப்பும், 'அது ஒரு சமூக அநீதி' என்ற மதியும் மக்களுக்கு ஏற்படாததுதான்.

"மேலும், மதுவிலக்குத் திட்டத்திற்கு மாறுபட்டு நடக்கின்றவர்களெல்லாம் நாளும் கஷ்டப்படுகின்ற நிலையில் தங்களுடைய வாழ்க்கைத் தரம் தேய்ந்துபோயிருக்கும் காரணத்தினாலேயே இந்தத் தவறான வியாபாரம் செய்கிறார்கள். இந்தத் தவறு செய்பவர்களைக் கண்டுபிடிக்கும்போது மேலும் அவர்கள் அதே குற்றத்தைச் செய்து பிழைப்பு நடத்தவேண்டிய நிலையில் இல்லாதவாறு அவர்களுடைய வாழ்க்கைத்தரமும், நிலையும் உயர்வதற்கு ஏற்ப, அவர்கள் எத்தனை பேர் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டாலும், அவர்களுக்கு நல்ல நம்பிக்கை ஊட்டக்கூடிய விதத்தில் அத்தனை பேர்களும் வேறு நல்ல தொழில்களில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

"அதுமட்டுமல்ல; மதுவிலக்குக் குற்றங்கள் காரணமாகப் பொதுவாகப் பேசப்படுகிற கருத்து என்னவென்றால், யார் அந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குக்கூட இந்த குற்றங்கள் நடைபெறுவதில் தான் நல்ல இலாபம் இருக்கிறது என்று மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். அது ஓரளவு உண்மையாகவே இருக்குமென்று நம்புகிறேன். சாதாரண அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் அந்தக் குற்றங்களுக்கு உடந்தையாக இருப்பார்களானால் நாம் இந்த நிலையைப் போக்கமுடியாது. ஆகவே, அந்த அதிகாரங்களை முதலில் ஒழுங்குக்கு உட்படுத்தவேண்டும்; அவர்கள் குற்றம் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் குற்றம் செய்கிறார்களா என்று கண்டுபிடிப்பதற்கு மிகத் தீவிரமான திட்டத்தை இந்த அரசாங்கம் தயாரிக்க வேண்டும்.

"மதுவிலக்கு வெற்றி பெற, மது பருகுவதை 'ஒத்த பிற கேடான நடைமுறைகளும் தடுக்கப்படவேண்டும். மக்கள் வாழ்க்கைத்தரம் உயரக்கூடிய விதத்திலும், மனப்பான்மை உயரவேண்டிய விதத்திலும் செயற்படவேண்டிய அரசாங்கத்தார், அரசாங்கத்திலேயே இலஞ்சத்திற்கும், சூது முதலிய கேடான செயல்களுக்கும் இடம் தரும் வகையில் நடந்துவருவது வருந்தத்தக்கது.

"இன்றையத் தினம் கிண்டி குதிரைப்பந்தயம் நடைபெற்றுக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். குதிரைப் பந்தய சூதாட்ட மனப்பான்மையை இன்னும் அரசாங்கம் ஒழிக்காமல் இருப்பது தவறு. கிண்டியிலுள்ள குதிரைகளை வளர்ப்பதற்காக மக்களை—பாமரர்களின் வாழ்க்கை நலத்தைப் பலியிடுவது மிகமிகப் பெரிய தவறு என்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"அரசாங்க நிர்வாகத்தின் சிக்கனத்திற்காக ஒரு நிபுணரை அரசாங்கம் நியமித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் கண்ணுக்குத் தெரிகிற தவறுகளை விட்டு விட்டுச் சிக்கனத்தை எப்படி செய்யலாம் என்பதற்கு மிக மிக ஆழமாக யோசிக்க வேண்டுமென்று கருதி, அதற்காக ஒரு அதிகாரியை நியமித்துள்ளனர்.

"சென்னை அரசாங்கத்தில் மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மந்திரிகள் இருக்கிற போது—அதிலும் மக்களுடைய நம்பிக்கைக்குரியவர்கள் என்று நாட்டு மக்களால் கருதப்படுகிறவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மந்திரிகள் இந்த நாட்டை ஆளுகிற போது, மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளாத யாரோ ஒருவர் கவர்னராக இருந்துதான் தீரவேண்டும் என்றும், அவருக்கு ஆண்டு தோறும் ரூ. 10 இலட்சம் செலவாகுமென்றும் சொல்லுகிற நிலை ஏற்பட்டிருப்பது காங்கிரசுக்கும் பெருமையல்ல—இந்த நாட்டிற்கும் தேவையல்ல—எதிர்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல; மாறாக, கண்டிக்கப்பட்டு வருவதாகும்.

"இந்த ரூ. 10 இலட்சத்தை நாட்டிலே உள்ள ஏழை மக்களுக்கும் தொழில் துறையிலும் வாழ்க்கையிலும் தாழ்ந்திருப்பவர்களுக்கும் உதவியாகப் பயன் படுத்தலாம்; சாதாரண அரசாங்க ஊழியர்களின் எளிய நிலையை உயர்த்தலாம்; கிராம அதிகாரிகளுக்கு இப்பொழுது கொடுப்பதாக கூறியுள்ள 5 ரூபாயைவிட இன்னும் அதிகமாகத் தரலாம்; என். ஜி. ஓ.-க்களுக்கும், ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தாழ்நிலை ஊழியர்களுக்கும் தற்பொழுது கொடுக்கப்படும் தொகை மிகவும் குறைவானதே அவர்களுக்கு இன்னும் அதிகமாக கொடுக்கலாம்.

"கண்ணுக்குத் தெரியும் துறைகள்பலவற்றிலும் வீண் செலவு ஏற்படாமல் தடுத்து, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வழிவகை வகுத்தால்தான் நாடுநலம் பெறும்; மக்கள் நல்வாழ்வு பெறுவர். இதைத்தான் இந்த வரவு—செலவுத் திட்டத்தைப் பற்றி தி. மு. கழகத்தின் சார்பில் நான் தெரிவிக்க விரும்புவதாகும்."

சென்னையில்
ஜூலை-7 முறையிடும் நாள்
கூட்டம் — ஊர்வலம்

★

"7—7—57 அன்று புதுவரி விதிப்பு முறையிடும் நாள் கூட்டம் சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்கா திடலில் நடைபெற இருக்கிறது; அக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. **நெடுஞ்செழியன்** அவர்களும், மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்து கொள்ளுகிறார்கள்.

"அன்று பிற்பகல் 2-மணிக்கு வடசென்னை தொகுதியிலுள்ள பொதுமக்களும் கிளைக் கழகத் தோழர்களும், நகரசபை உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமையில், இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாக சென்று தோழர் எஸ். சி. சி. அந்தோணிப்பிள்ளை அவர்களிடம் முறையீடு நகலைக் கொடுத்துவிட்டு கூட்டத்தை வந்தடைவர். அதேபோன்று தென் சென்னை தொகுதியிலுள்ளபொதுமக்களும் கிளைக் கழகத் தோழர்களும், நகரசபை உறுப்பினர் தோழர் அ. பொ. அரசு அவர்கள் தலைமையில் திருவல்லிக்கேணி 'மெரீனா' கடற்கரையிலிருந்து அன்று பிற்பகல் 3-மணிக்குப் புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களிடம் முறையீட்டு நகலைக் கொடுத்துவிட்டு கூட்டத்தை வந்தடைவர்.

"கழகத் தோழர்கள் அனைவரும் வரிவிதிப்புக் கண்டன தட்டிகளுடன் கழகக் கொடிகள் ஏந்தி ஆயிரக்கணக்கில் உரிய தொகுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் அவர்கள் அறிவிக்கிறார்.

ஸ்ரீ லலித கலா மன்றம்—சென்னை-1

ராஜா அண்ணாமலை மன்றத்தில்
7-7-57 ஞாயிறுமாலை 6-15மணிக்கு
திரு. க. அன்பழகன் M.A., M.L.A.
அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். இராஜேந்திரன்
நாடக மன்றத்தார் அளிக்கும்
'புதுவெள்ளம்'
(தமிழ் சமூக நாடகம்)
★
கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1.

சேலம் தொகுதி வழக்கு

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால், சேலம் ஏ. மாரியப்பன் அவர்கள் மீது தொடரப்பட்ட சேலம் தொகுதி தேர்தல் வழக்கு வட ஆற்காடு மாவட்ட நீதிபதி வெங்கட்ராமன் ஐ. சி. எஸ். அவர்கள் முன்னிலையில் 6—7—57 சனியன்று நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சார்பில் வாதாட சென்னை-வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் வேலூர் செல்கிறார்.

சென்னை 50-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்களுக்கு:

6—7—57 இரவு 8 மணிக்கு மேற்படி வட்ட உறுப்பினர்கள் கூட்டம், 'கபாலி திரையரங்கு' எதிரிலுள்ள வாலிபர் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்; அதுபோது கழக மனை இடம் மாற்றம் குறித்து ஆராயப்படும்.

ரூ. 5,559 செலவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வகையில் முதல் நடவடிக்கையாக, மாநில கவர்னருக்கு வரவேற்பு அளிப்பதற்காக நகரசபை ஒன்று செலவிட்ட 5,559 ரூபாயையும், மற்றுமோர் நகரசபை முதன்மந்திரிக்கு வரவேற்புத் தர செலவிட்ட 259 ரூபாயையும் அனுமதிக்க முடியாதெனக் கூறிவிட்டார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.